

திருப்பூர் மாவட்டம், காங்கேயம் ஒன்றியம், படியூர் அருகில் கழகத் தலைவர் அவர்கள் பங்கேற்கும் மேற்கு மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (பூத் கமிட்டி) பாசறைக்கூட்டம் குறித்து திருப்பூர் தெற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள் அவசரக்கூட்டம் கூட்டதிடல் அலுவலகத்தில் திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார். இதில் மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### சின்னாளபட்டி பேரூராட்சியில் தூய்மைப் பணியாளராக பணிபுரியும்

# அருந்ததியர் சமுதாய மக்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும்!

## சின்னாளபட்டியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு!

சின்னாளபட்டி, செப் 20 -

சின்னாளபட்டி பேரூராட்சியில் தூய்மைப் பணியாளராக பணிபுரியும் அருந்ததியர் சமுதாய மக்கள் குடியிருக்கும் மக்களுக்கு தகுதியான இடங்களை தேர்வு செய்து வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும் சின்னாளபட்டியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஊரகவளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார். ரூ.2 கோடியே 43லட்சம் மதிப்பில் கட்டப்படும் புதிய பேருந்துநிலையம் திறக்கப்படும் போது மதுரை செல்லும் பேருந்துகள் வந்துசெல்லும் வண்ணம் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதியளித்தார்.

திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டி சிறப்புநிலை பேரூராட்சியில் கடந்த 50 வருடங்களாக செயல்பட்டு வந்த பழைய பேருந்துநிலையம் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களின் சீரிய முயற்சியால் ரூ.2கோடியே 43 லட்சம் மதிப்பில் புதுப்பிக்கப்படுகிறது. புதிய பேருந்துநிலையம் 12 வணிக வளாக கடைகள், ஒரு உணவகம், பயன சீட்டு பதிவறை, ஏ.டி.எம். சென்டர், ஆண்கள், பெண்கள் காத்திருப்போர் அறைகள், தாய்மார்கள் பாலூட்டும் அறை, இருசக்கர வாகனங்கள் பாதுகாப்பு நிலையம், பேருந்து ஒடுதளம், குடிநீர்; வசதி, வடிகால் வசதி, சுற்றுச்சுவருடன் நவீன வசதிகளுடன் கட்டப்படுகிறது. பேருந்துநிலையம் அருகே சின்னாளபட்டி சிறப்புநிலை பேரூராட்சியில் தூய்மை பணியாளர்களாக பணிபுரியும் அருந்ததிய சமுதாய மக்களின் குடியிருப்புகள் உள்ளது. சுமார் 25 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட வீடுகளில் மிகுந்த சிரமத்துடன் அவர்கள் வசித்து வருகின்றனர். சின்னாளபட்டிக்கு நலத்திட்ட பணிகளை துவக்கி வைக்க வந்த ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களிடம் அச்சமுதாயத்தை சேர்ந்த நிர்வாகி கள் கோரிக்கை மனு கொடுத்தனர்.

அந்த கோரிக்கை மனுவில் தங்களுக்கு புதிய குடியிருப்புகள் வேண்டுமென கோரிக்கைவிடுத்திருந்தனர். மனுக்களை பெற்ற பின்பு பேசிய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி கடந்த 10 வருடங்களுக்கு முன்பே அருந்ததியர் மக்களுக்கு தகுதியான இடத்தை தேர்வு செய்து குடியிருப்புகள் கட்ட ஆய்வு செய்த போது ஆட்சிமாற்றம் ஏற்பட்டது. அதன்பின்பு அ.தி.மு.க. ஆட்சியில் 10 வருடங்களாக அவர்களுக்கு குடியிருப்புகள் கட்டிக்கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. தற்போது கழகத்தலைவர் திராவிட மாடல் ஆட்சி நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சியில் அவர்களுக்கு புதிய வீடுகள் அமைய உள்ளது. அதற்கான இடங்களை தேர்வு செய்து வருகிறோம். குறிப்பாக அம்பாத்துரை ஊராட்சிக்கு உட்பட்ட கொல்லபட்டியில் அருந்ததியர் சமுதாய மக்களுக்கு இடங்களை வழங்கியது போல் இங்குள்ள அருந்ததியர் சமுதாய மக்களுக்கும் வீடுகள் கட்டுவதற்கு இடங்களை தேர்வு செய்து வருகிறோம். அதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது என்றார்.

மேலும் இந்த பேருந்துநிலையம் கட்டிமுடிக்கப்பட்டவுடன் சின்னாளபட்டி ஊருக்குள் நுழைந்து செல்லும் மதுரை செல்லும் பேருந்துகள் அனைத்தும் மீண்டும் வருவதற்கும் கூடுதலாக கிராமங்களை இணைக்கும் நகர பேருந்துகளும் வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். கோரிக்கை மனு கொடுத்தவுடன் தங்களுக்கு புதிய இடத்தில் வீடுகள் கட்டித்தர ஊரகவளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதியளித்தது அருந்ததியர் சமுதாய மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது..

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டில்

# மீனவ மக்களின் கோரிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்கி நிறைவேற்றிய முதல்வருக்கு நன்றி!

## அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற கழக மீனவர் அணிக் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, செப். 20-

மீன்வளம், மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் தலைமையில் மீனவர் அணி மாநில செயலாளர் அ.ஜோசப்ஸ்டாலின், தலைவர் இரா.பெர்னாடு, துணைத்தலைவர்கள் கே.பி. சங்கர் எம்.எல்.ஏ., இரா.மதிவாணன் ஆகியோர் முன்னிலையில், துணைச் செயலாளர்கள் கலந்து கொள்ளும் மீனவர்கள் அணி நிர்வாகிகளின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

மீனவர்கள் மீது எல்லையற்ற அன்பு கொண்டு அவர்தம் துயர் நீக்கிய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டில் மீனவ மக்களின் கோரிக்கைளுக்கு முன்னுரிமை வழங்கி முத்தான பத்து அறிவிப்புகளை வெளியிட்ட தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு கழக மீனவர் அணி சார்பில் நன்றி தெரிவித்து

தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மீனவ மக்களின் நம்பிக்கை நாயகர் நாட்டு மக்களின் மேன்மை ஒன்றையே இலக்காகக் கொண்டு அல்லும் பகலும் அயராது உழைக்கும் திராவிட சூரியன் இந்திய தேசத்தின் அனைத்து மாநிலங்களுக்கும் முன்னோடியாக இராமநாதபுரம் மாவட்டத்தில் நடைபெற்ற மீனவர் நல மாநாட்டில் கலந்து கொண்டு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் மீனவ மக்களின் நெடுநாள் கோரிக்கைகளை நிறைவேற்றி வெளியிட்ட அறிவிப்புகளான,

1. மீன்பிடி தடைக்கால நிவாரணத் தொகை ரூ. 5,000/ ரூபாயிலிருந்து ரூ.8, 000/-மாக உயர்த்தி வழங்க உத்தரவு

2. விசைப்படகுகளுக்கான மானிய விலை டீசல் 18,000 லிட்டரிலிருந்து 19,000 லிட்டராக உயர்த்தி வழங்கிய உத்தரவு

3. மீனவர்கள் நலத்திட்டத்தின் மூலம் கட்டுப்பட்டுள்ள 5034 வீடுகளுக்கு பட்டா வழங்க உத்தரவு.

4. 45,000 மீனவர்களுக்கு மீன்பிடி தொழிலுக்கான கூட்டுறவு கடன் வழங்கவும் உத்தரவு.

5. தூத்துக்குடி, கன்னியாகுமரி, திருநெல்வெலியை சார்ந்த நாட்டுப்படகு மீனவர்களுக்கு மண்ணெண்ணெய் 3400 லிட்டரில் இருந்து 3700 லிட்டராக உயர்த்தி வழங்க உத்தரவு.

6. தங்கச்சிமடத்தில் மீன்பிடித்துறைமுகம் அமைப்பதற்கான ஆய்வுகளை மேற்கொள்ள ஆணை வழங்கி உத்தரவு மற்றும் பாம்பன் பகுதியில் உள்ள மீன்பிடி படகுகளை நிறுத்துவதற்கு தூண்டில் வளைவு அமைப்பதற்கு ஆய்வு மேற்கொள்ள உத்தரவு மற்றும் குந்துக்கால் மீன்பிடித்துறைமுகத்தில் படகுகளை நிறுத்துவதற்கு தூண்டில் வளைவு அமைப்பதற்கான ஆய்வுகளை மேற்கொள்ள ஆணை வழங்கி உத்தரவு

7. மீனவ கிராமங்களில் கடல் அரிப்பை தடுக்க தூண்டில் வளைவுகள், தடுப்பு சுவர்கள் அமைக்கப் படும் என உத்தரவு.

8.60 வயதிற்கு மேற்பட்ட மீனவர்கள் 15,000 பேருக்கு மீன்பிடி தடைக் காலத்தில் நிவாரணம் வழங்கப்படும் என உத்தரவு.

9. மீனவர் விபத்து காப்பீட்டு திட்டத்தின் கீழ் 205 குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்கி உத்தரவு.

10. நாட்டுப்படகு மீனவர்களுக்கு மானிய விலையில் 1000 வெளி பொறுத்தும் இயந்திரங்கள் வழங்கிட உத்தரவு என முத்தான பத்து அறிவிப்புகளை வெளியிட்டு மீனவ மக்களின் மீது எல்லையற்ற அன்பு கொண்டு அவர்தம் துயர் நீக்கிய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டில் மீனவ மக்களின் கோரிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்கிய தமிழ்நாடு முதல மைச்சர் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு கழக மீனவர் அணியின் சார்பிலும், ஒட்டு மொத்த தமிழக மீனவர்களின் சார்பிலும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

லைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை தலைமை கழகத்தால் அறிவிக்கப்பட்டுள்ள மீனவர் நலனில் கழகம் எனும் நிகழ்ச்சிகள் அனைத்தும் மீனவர் அணியின் சார்பில் மாவட்டந்தோறும் சிறப்பாக நடத்திட வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

5. வரவிருக்கும் 2024 நாடாளுமன்ற தேர்தலில் தேசம் வியக்கும் கழக திராவிட நாயகன் கழகத் தலைவர் தலைமையிலான "இந்தியா" கூட்டணி இந்தியாவை ஆளுகின்ற கூட்டணியாக மாறுவதற்கு உறுதுணையாக தமிழ்நாடு மற்றும் புதுவையின் 40 நாடாளுமன்ற தொகுதிகளிலும் (தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி) திராவிட முன்னேற்றக் கழகத்தின் கூட்டணி மகத்தான வெற்றி பெறும் வகையில் கழக மீனவர் அணியினர் மீனவர் மக்கள் நிறைந்த அத்தனை தொகுதிகளிலும் அயராது உழைத்து கழகத் தலைவர் அவர்களின் கரத்தை வலுப்படுத்த வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்ப ட்டது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### கடலூர் கிழக்கில் சட்டமன்றத் தொகுதி வாரியாக

# பாக முகவர்கள் கூட்டத்தினை நடத்திட வேண்டும்!

## மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

கடலூர், செப்.20-

கடலூர் கிழக்கு மாவட்ட திமுக செயற்குழு கூட்டம் காணொலி காட்சி வாயிலாக 15- 09- 2023 வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம், தலைமையில் நடைப்பெற்ற கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றி சிறப்புரை யாற்றினார்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு:

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் மகத்தான கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் தமிழ்நாடு முழுவதும் 1 கோடியே 6 இ,லட்சத்து 50 ஆயிரம் மகளிர்க்கு ஆணைப்பிரப்பித்து துவக்கி வைத்ததற்கு கடலூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் இக்கூட்டம் நன்றியை தெரிவித்துக்கொள்கிறது.

கடலூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் சட்டமன்ற தொகுதி வாரியாக நியமிக்க ப்பட்ட Bla2 (Botth Level Agent) மற்றும் BLC (Booth Leve Committee) அந்தந்த பகுதிகளில் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் பகுதிகளில் கூட்டம் நடத்திட வேண்டுமென இக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

டிசம்பர் மாதம் சேலத்தில் நடைபெறும் 2வது இளைஞரணி மாநில மாநாடு நடைபெறுவதையொட்டி மாவட்ட, மாநகர, ஒன்றிய நகர, பகுதி, பேரூர் பகுதிகளில் சுவர் விளம்பரம், துண்டு பிரசுரம் செய்திட வேண்டுமென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அண்ணன் தளபதி அவர்களின் அவர்களில் தலைமையிலான கழக சாதனைகளை விளக்கி கடலூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வார்டு, கிளைக் கழகங்கள் தோறும் துண்டு பிரசுரங்கள், பிரச்சாரங்கள் செய்வதென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள்**

அவைத்தலைவர் து.தங்கராசு, கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி, , கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், கழக பொறியாளர் அணி செயலாளர் துரை.கி.சரவணன், , முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மருதூர் ராமலிங்கம் மாவட்ட துணைச் செயலாளர் அ.ஞான முத்து, ஆர்.சக்திவேல், சுதா சம்பத், மாவட்ட பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன், கடலூர் மாநகர செயலாளர் கே.எஸ். ராஜா, ஒன்றிய செயலாளர்கள்: குறிஞ்சிப்பாடி தெற்கு வி.சிவக்குமார், காட்டு மன்னார்கோவில் மேற்கு அ. முத்துசாமி, கிழக்கு ப.இராமலிங்கம், திருமுட்டம் கிழக்கு தங்க. ஆனந்தன், பரங்கிப் பேட்டை வடக்கு முத்து.பெருமாள், தெற்கு ஆர்.கலையரசன், கம்மாபுரம் தெற்கு கே. ஆர்.ராயர், வடக்கு ஆர்.திருமாவளவன் கடலூர் கிழக்கு தெ.காசிராஜன், குறிஞ்சிப்பாடி வடக்கு ஆர்.நாராயணசாமி, புவனகிரி கிழக்கு எம்.. மனோகரன்,

புவனகிரி மேற்கு ஏ.எஸ். மதியழகன், கீரப்பாளையம் கிழக்கு வி.ஜி.பி.சபாநாயகம், மேற்கு டி.திருமூர்த்தி, திருமுட்டம் வடக்கு எஸ்.செந்தில்குமார், திருமுட்டம் மேற்கு கே.ஆர்.கே.கோவிந்தராஜ், கடலூர் மேற்கு பி.சுப்ரமணியன், வடக்கு கே.ஆர்.தனஞ்செயன், தெற்கு ஆர்.விஜயசுந்தரம், கம்மாபுரம் மத்தியம் சுந்தர பாண்டியன், குமராட்சி கிழக்கு த. சங்கர், மேற்கு நளன்புத்தூர் கே.நடராஜன், தெற்கு எம். சோழன், வடக்கு வி.கோவிந்தசாமி, மத்தியம் வி.ஆர்.ராஜேந்திகுமார், மாநகர மேயர் சுந்தரி ராஜா, பகுதி செயலாளர்கள்: எஸ்.பி.நடராஜன், பா.வெங்கடேஷ், எஸ்.சலீம், மு.இளையராஜா, நகர செயலாளர்: கே.ஆர்.செந்தில்குமார்,

வடலூர் த.தமிழ்ச்செல்வன், செயற்குழு உறுப்பினர்: கிள்ளை எஸ்.ரவிச்சந்திரன், வி.ஞானசேகரன், வே. விக்கிரமன், ஹபொதுக்குழு உறுப்பினர்கள்: கே.பி.ஆர்.பாலமுருகன், த.ஜேம்ஸ்.விஜயராகவன், எம்.ஆர்.சண்முகம், ச.கல்யாணசுந்தரம், வி.பி.பாலு, எஸ். பி.கண்ணன், மு.வெற்றிவேல், என்.டி.கணேசன், பா.கோதண்டபாணி, ர.மஞ்சு, பேரூர் செயலாளர்கள்: காட்டுமன்னார் கோவில் எஸ்.கணேசமூர்த்தி, குறிஞ்சிப்பாடி கே.வி.பி.ஜெய்சங்கர், சேத்தியாதோப்பு ப. மனோகரன், பரங்கிப்பேட்டை ஏ.ஆர்.முனவர் உசேன், புவனகிரி த.கந்தன், கெங்கைகொண்டான் சி.பக்தவச்சலம்,

அ ண் ண ா ம லை ந க ர் க.பழனி, திருமுட்டம் பூ.செல்வகுமார், லால்பேட்டை ஜெ.எம்.அன்வர் சதாத், மாவட்ட கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள்: இளைஞரணி ஜி.கார்த்திகேயன், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் வி.சி.சண்முகம், பொறியாளர் அணி அப்பு.சந்திரசேகர், மாணவர் அணி ஆர். சத்தியநாராயணன், தொண்டர் அணி ஆராமுது, விவசாய தொழிலாளர் அணி ம.ராமசாமி,

மகளிர் அணி அமுதாராணி, மகளிர் தொண்டர் அணி ப.மனோரஞ்சிதம், வழக்கறிஞர் அணி பி.அருள்ஜோதி, நெசவாளர் அணி ப.நல்லத்தம்பி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி ஆர்.பரந்தாமன், சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு எம்.எஸ்.முகமது யூனூஸ், வர்த்தகர் அணி ஆர். ரெங்கநாதன், தகவல் தொழில் நுட்ப அணி ஏ.ஜாபர் அலி, மருத்துவ அணி டாக்டர்.கமலக்கண்ணன்,

விளையாட்டு மேம்பாட்டு அணி பூ.சதீஷ்குமார், மீனவர் அணி வீ.செல்வபாரதி, சுற்றுச்சூழல் அணி ஆர்.மணி வண்ணன், அயலக அணி வாசு(எ) விசுவராஜ், தொழிலாளர் அணி கி.தண்டபாணி,

அமைப்பு சாரா ஓட்டுநர் அணி தாணூர் சிவக்கொழுந்து, தொகுதி மருத்துவ அணி டாக்டர்.பா.கலைக்கோவன், குறிஞ்சிப்பாடி டாக்டர்.சிவ.செந்தில், காட்டுமன்னார்கோவில் டாக்டர்.கோ.கார்த்திகேயன், புவனகிரி ரா.வசந்த், சிதம்பரம். ரெ.ரெ.கிருஷ்ணராஜ்,

வடலூர் நகராட்சித் தலைவர் சிவக்குமார், துணைத் தலைவர் ஆர்.சுப்புராயலு, பேரூராட்சித் தலைவர்: குறிஞ்சிப்பாடி கோகிலா குமார், பரங்கிப்பேட்டை தேன்மொழிசங்கர், சேத்தியாதோப்பு வீ. குலோத்துங்கன், கெங்கை கொண்டான் பரிதா அப்பாஸ், துணைத்தலைவர் எஸ்.கே.கருணாநிதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### திருவாரூர் மாவட்ட மருத்துவ அணி சார்பில்

# அரசு மருத்துவமனைக்கு மருத்துவ உபகரணங்கள் வழங்கல்!

திருவாரூர்,செப்.20-

கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆகியோரின் வழிகாட்டுதலின்படியும், மாநில மருத்துவ அணி தலைவர் மரு.கனிமொழி எம்.பி., செயலாளர் மரு.எழிலன்நாகநாதன் எம்.எல்.ஏ. ஆகியோர்களின் அறிவுறுத்தல்படியும், மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர் மரு. அஞ்சுகம் பூபதி எம்.எஸ்., ஆலோசனைகளின்படியும், மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி. கே. கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் மற்றும் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திருவாரூர் மாவட்ட மருத்துவ அணி சார்பில், நன்னிலம் தொகுதி திருவீழிமிழலை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் கூடுதல் மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இ ந் நி க ழ் ச் சி யி ல் மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் மரு.திவாகரன் சுபாஷ் வரவேற்புரை யாற்ற, மாவட்ட துணைச் செயலாளர் சாந்தி பாஸ்கர், குடவாசல் வடக்கு ஒன்றியச் செயலாளர் எஸ்.ஜோதிராமன், மாவட்ட மருத்துவ அணி தலைவர் மரு.வி.ஜே. சரவணன் எம்.டி, ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட ஊராட்சி உறுப்பினர் மணவை. க. சுப்ரமணியன் ஒன்றியக் குழு உறுப்பினர் டாக்டர். புவனா சுபாஷ், மாவட்ட மருத்துவ அணி துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், தொகுதி துணை அமைப்பாளர்கள், ஒன்றியக் குழு உறுப்பினர்கள், கிளைச் செயலாளர்கள் மற்றும் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், வட்டார மருத்துவ அலுவலர் உள்ளிட்ட மருத்துவப் பணியாளர்கள், பொதுமக்கள் திரளானோர் பங்கேற்றனர்.

விழா இறுதியில் மாவட்டப் பிரதிநிதி மு.சி.பாஸ்கர் அவர்கள் நன்றி தெரிவித்தார். விழா ஏற்பாடுகளை மாவட்ட மருத்துவ அணியினர் செய்திருந்தனர்.



தந்தை பெரியார் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 17.09.23 அன்று மாநகரச் செயலாளரும் மண்டல தலைவருமான மு.மதிவாணன் தலைமையில் திருச்சி கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் எஸ்.இனிகோ இருதயராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.என். சேகரன் ஆகியோர் முன்னிலையில் திருச்சி மாநகர கழகத்துக்கு உட்பட்ட காட்டூர் பகுதியில் அமைந்துள்ள தந்தை பெரியாரின் திருஉருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. மாநில செயலாளர் செந்தில், மாவட்டத் துணைச் செயலாளர்கள் செங்குட்டுவன், லீலாவேலு, பகுதிக் கழகச் செயலாளர்கள் நீலமேகம், தர்மராஜ், மோகன், மணிவேல், பாபு, விஜயகுமார், சிவகுமார், ஒன்றியச் கழகச் செயலாளர்கள் கருணாநிதி, கங்காதரன், பழனியான்டி, ராஜேந்திரன், மாவட்ட, மாநகர நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், பேரூர், வட்ட, வார்டு, கிளை கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாவட்ட தொகுதி அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழகத் தொண்டர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி தாலுகா வீரணாமூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் 11ஆம் வகுப்பு படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் வழங்கினார். உடன் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார், ஒன்றியச் செயலாளர்கள் அண்ணாதுரை, இளம்வழுதி உள்ளனர்.



கோவை மாநகர் மாவட்டம் சார்பில் பேரறிஞர் அண்ணா 115 வது பிறந்த நாளை முன்னிட்டு பேரறிஞர் அண்ணா சிலைக்கு முன்னாள் அமைச்சர் பொங்கலூர் நா.பழனிசாமி, மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக், மாநில மாவட்ட நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள், வார்டு கழகச் செயலாளர்கள், மகளிர் அணியினர் மற்றும் கழக நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.